5th **November 1966]**

திரு. இரா. நெடுஞ்செழியன் : கல்லூரிகளுக்கு மாணவர்களைத் தேர்ந்தெடுக்கும் குழுவில் அந்தந்த நகரங்களில் அந்தந்த நகரங்களைச் சேர்ந்த எம்.எல்.ஏ.-க்கள் போடப்பட்டிருக்கிறார்கள். அந்த முறையில் சிலபல இடங்களில் எம்.எல்.ஏ.-க்கள் சேர்க்கப்படவில்லை. காங்கிரஸ் எம்.எல்.ஏ-க்கள் இருக்கின்ற இடங்களில் போட்டிருக்கிறார்கள். மாற்றுக் கட்சியினர் இருக்கக்கூடிய இடங்களில் போடப்படவில்லை. இந்த அடிப்படையில் அமைந்திருப்பதற்குக் காரணம் என்ன?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : தேர்ந்தெடுக்கப்படுகிறவர்கள் எல்லாம் எம்.எல்.ஏ.-க்கள் அல்ல. காங்கிரஸ் எம்.எல்.ஏ.-க்கள் என்று சொல்வதும் சரியல்ல. மற்றவர்களும் இதிலே தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். எம்.எல்.ஏ.-க்கள் அல்லாதவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள்.

Central College of Karnataka Music

* 430 Q.—Sri V. Sankaran : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether it is a fact that the students who had taken Nagaswaram and Thavil courses at the Central College of Karnataka Music during the years 1961 to 1964 have performed poorly in their written tests ; and

(*b*) if so, whether the schemes for examinations will be modified suitably?

The Hon. Sri M. Bhaktavatsalam : (*a*) Yes.

(*b*) Yes.

திரு. வை. சங்கரன் : ஏற்கனவே இது சம்பந்தமாக பரீட்சைகளுக்கு இருந்த ஸ்கீம் என்ன? இப்போது எந்த முறையில் மாற்றுவதற்கு உத்தேசிக்கப்பட்டிருக்கிறது?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஏற்கனவே கொஞ்சம் அதிகம் படித்திருக்கவேண்டும் என்று இருந்தது. அதிகமாகப் படித்திருக்கிறவர்களில் இதில் வரக்கூடியவர்கள் குறைவாக இருந்தது. ஆகவே இந்த விதி தளர்த்தப்பட்டிருக்கிறது.

திரு. இராம. அரங்கண்ணல் : இந்த கர்நாடக இசைத் துறையில் நாதஸ்வரம், தவில் போன்றவை நாம் போற்றி வளர்க்கவேண்டிய கலைகள். அவற்றில் படிக்கிற மாணவர்களுக்கு திறமைக்குறைவு ஏற்படுவதற்கு என்ன காரணம் என்பதை அரசு ஆராய்ந்ததா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : சேருகிற மாணவர்களுக்கு கொஞ்சம் "பாக்கிரௌண்ட்" இருக்க வேண்டும். சென்னையில் அதிகம் இல்லை. பழனியில் நடக்கிறது. நன்றாக நடக்கிறது. ஆகவே, திருவையாற்றில் அரசாங்கம் நடத்துகிற கல்லூரியில்கூட இந்தப் பாடங்கள் இப்போது போதிக்கப்பட்டு வருகின்றன.

திரு. வை. சங்கரன் : 1961 முதல் 1964 வரையில் எவ்வளவு மாணவர்கள் ரிட்டன் டெஸ்ட் எழுதினூர்கள்? அவர்களில் எவ்வளவு பேர்கள் பாஸ் செய்தார்கள்?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அந்தத் தகவல் என்னிடம் இல்லே.

திரு. ஆ. தங்கவேலு : கர்நாடக இசைக் கல்லூரியில் எந்தெந்த இனத்தைச் சார்ந்த மாணவர்கள் எடுக்கப்படுகிறுர்கள் ? மருத்துவ குல மாணவர்களுக்கு தனிச்சலுகை அளிக்கப்படுகிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதில் இனம் பார்ப்பதில்லே. இந்தத் தொழில் நடத்துவதற்கு தயாராகயிருக்கிறவர்கள் யாராக இருந்தாலும் சேர்க்கப்படலாம்.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : இந்த கர்நாடக சங்கீதத்தில் நாதஸ்வரம், தவில் இவைதான் போடப்பட்டிருக்கிறது. 'னொய், னொய்' என்று சப்தம் கேட்கிற ஒத்தும், 'சை, சை' என்று சப்தம் ஏற்படுத்தும் வேறென்று பற்றியும் இதில், குறிப்பிடக் காணேம். அதற்குத் தனியாக வேறு ஏதாவது பயிற்சி இருக்கிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதற்கெல்லாம் அதிக பயிற்சி வேண்டியதில்லே. சுலபமாக வீட்டில் கற்றுக்கொள்ளலாம்.

திரு. இராம. அரங்கண்ணல் : இந்தக் கலேத்துறையில் மிகவும் பெயர்போன மாவட்டம் தஞ்சை மாவட்டமாகும். அங்கு திருவையாறில் அமைக்கப்பட இருக்கிற கல்லூரியில் இந்தத் தொழில்களே கற்றுக் கொடுப்பதற்குப் பதில் தஞ்சையில் உள்ள குடந்தை அல்லது திருவாரூர் போன்ற இடங்களில் தனியாகவே இதற்கு ஒரு பள்ளிக்கூடம் நடத்தலாமே ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : தனியாக நடத்துவது பழனியில் நடத்தப்படுகிறது. சமீபத்தில் ஒரு சங்கீதக் கல்லூரி திருவையாறில் அமைக்கப்பட்டு அதில் இது ஒரு பாகமாக இப்போது சேர்க்கப்பட்டிருக்கிறது.

திரு. எஸ். நஞ்சுண்ட ராவ் : இந்தக் கல்லூரியில் படிக்கிறவர்களுக்கு எல்லாம் ஸ்காலர்ஷிப் வழங்கப்படுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : வழங்கப்படுகிறது.

சேலம் உருக்காலேத் திட்டம்

*** 431 கேள்வி.—திரு. ம. கமலநாதன் :**
திரு. மீ. கலியாணசுந்தரம் :
திரு. கோ. சி. மணி :
திரு. கரு. சீமைச்சாமி :

கனம்

கைத்தொழில் அமைச்சர் நவம்பர் 3-ம் தேதி 1965-ல் கேள்வி எண் 245-க்கு அளித்த பதிலேயொட்டி தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சேலத்தில் உருக்காலே அமைக்கும் திட்டம் தற்போது எந்த நிலேயிலுள்ளது ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : ஜப்பானிய ஆலோசனே நிறுவனத்தின் சர்வே குழு நெய்வேலி-சேலம் உருக்கு ஆலேத் திட்டம் பொருளாதாரக் கவர்ச்சியுள்ளதாகவும், தொழில் நுட்பத்